## சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.

**O.S.No: 209/2022** **தேதி: 17.04.2026**

**வா.சா. 2 – வெங்கடகிருஷ்ணன்**

**8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

சர்வே எண். 108/2 மொத்தம் 61 செண்ட் நிலம் என்றால் சரிதான். அதில் வடபுறம் 20 செண்ட் இடம் கணபதிசேர்வை என்பவர் இடம் என்றால் சரிதான். சர்வே எண். 108/2 க்குரிய சொத்தின் நான்குமால்களை திருத்தம் செய்யும் போது தான் அதன் தாய் பத்திரத்தை சீர்திருத்தம செய்ய வேண்டும் என்றால் சரிதான். மேற்படி சொத்தின் ஒரு சிறு பகுதி விற்பனை செய்யப்படும் போது அதற்குரிய நான்குமால் மாறுபடும் என்றால் சரிதான். ஒரு சொத்தினை பத்திர பதிவு அலுவலகத்தில் பதிவு செய்வதற்கு முன்பு சொத்திற்குரிய ஆவணங்களை சரிபார்த்து பின்னர் ஆவணங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் அதை பதிவு செய்வோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படுவது தாவா சொத்திற்குண்டான கிரைய ஆவணம் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ 1**. மேற்படி ஆவணம் சரியாக இருந்ததால் தான் பத்திர பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்தின் நான்குமால் குறித்து கிராம நிர்வாக அதிகாரி சான்று எதுவும் வழங்கமாட்டார் என்றால் 2016 வரை கிராம நிர்வாக அதிகாரி நான்குமால் குறித்து சான்று வழங்கி வந்தார்கள். அதன் பின்னர் சான்று வழங்குவதில்லை. நான்குமால்களை ஒரு தாளில் குறித்து மட்டும் கொடுப்பார்கள்.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.